**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# The Generosity of Pari as Portrayed in Purananuru

**J. Dhanalakshmi*, Dr. R. Aarthi[2],**
[1]Part-time Ph.D. Research Scholar, Department of Languages (Tamil), Karpagam Academy of Higher Education, Coimbatore.
[2]Research Guide, Department of Languages (Tamil), Karpagam Academy of Higher Education, Coimbatore.
*Correspondence: dhanaramana21@gmail.com

**Article Info**
Received on 20-April-2026, Revised on 27-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Thousands of species are born and live on this earth. Humans have categorized them from one-sensed to six-sensed beings. Every living creature possesses a unique trait. Similarly, humans are distinguished from other species by qualities such as love, character, charity, valor, passion, anger, jealousy, pride, and the drive to help others.

The world honors and praises those who internalize more than one of these noble virtues. Pari is one such sublime patron praised by the world. Much of literature speaks of Pari's character; this article aims to analyze those traits through the lens of Purananuru.

***KEYWORDS:*** *Pari – Mari (Rain) – Valor – Generosity (Vanmai) – Gentleness – Charity – Suppliants/Minstrels,*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# புறநானூறு கூறும் பாரியின் வண்மை

[1]**ஜெ.தனலட்சுமி,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், மொழிகள் துறை (தமிழ்), கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்.
[2]**முனைவர் ர.ஆர்த்தி,** ஆய்வு நெறியாளர், மொழிகள் துறை (தமிழ்), கற்பகம் உயர்கல்விக்கழகம் கோயம்புத்தூர்.

**முன்னுரை**

நமது பழந்தமிழ்நாடு வளங்கள் பல பெற்றுச் சிறந்த பெருநாடாகத் திகழ்ந்திருந்தது. இத்தகைய பெருமை மிக்க தமிழ்நாட்டில் இலக்கியங்கள் மிகுந்து காணப்படுகின்றன. எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூறு அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்களின் புறவாழ்க்கையைப் பேசக்கூடியது. தமிழகத்தில் பெருஞ்செல்வம் படைத்த பெருமக்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களில் சிலர் இரப்பவர்கக்கு இல்லை என்னாது கொடுக்கும் ஈகை குணம் கொண்டவர்கள். பெருஞ்செல்வம் பெற்றவர்கள் என்ற செருக்கு அவர்கள்பால் சிறிதும் இல்லை. செல்வம் பெற்றதன் பயன் பிறர்க்கு கொடுத்தல் என்பதே அவர்களின் குறிக்கோளாகும். இன்பம் பலவற்றுள்ளும் பிறர்க்கு ஈத்துவக்கும் இன்பமே இணையற்ற இன்பமென அவர்கள் கருதினர். இவர்களைக் கடையெழு வள்ளல்கள் என்று அழைத்துப் பெருமை கொண்டிருக்கிறோம் நாம். கடையெழு வள்ளல்களில் தலையிடம் கொண்டவன் பாரி. தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் பெருமைப்படுத்தி பிற உயிர்களையும் மதித்துப் போற்றியவர்களையே பேறு பெற்றவர்கள் என்பர். அத்தகைய பேறு பெற்றவர்களில் வள்ளல் பாரி முதன்மை பெருகிறான். அவனுடைய வண்மை அளப்பறியது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**ஆய்வுச்சுருக்கம்**

புவியில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றை ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை மனிதன் வகைப்படுத்தியுள்ளான். அனைத்து உயிரினங்களும் தனக்கென்று ஒரு தனித்துவமான பண்பினைப் பெற்றுத் திகழும். அவ்வாறு மனிதனும் அன்பு, பண்பு, ஈகை, வீரம், காதல், கோபம், பொறாமை, செருக்கு, பிறர்க்கு உதவுதல் என்று பிற உயிரினங்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவனாகக் காணப்படுகிறான். இத்தகைய பண்புகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட நற்பண்புகளை தன்னுடைமையாக்கிக் கொண்டவனை உலகம் போற்றிப் புகழ்கிறது. உலகம் போற்றும் உன்னத வள்ளல் பெருமக்களில் ஒருவன் பாரி. இலக்கியங்கள் பலவும் பாரியின் பண்பு பற்றி மொழிகின்றன. அவற்றைப் புறநானூற்றின் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

பாரி – மாரி – வீரம் – வன்மை – மென்மை – ஈகை – இரவலர்

**பாரியும் மாரியும்**

புலவர்கள் அனைவரும் பாரி பாரி என்று அவன் ஒருவனை மட்டுமே புகழ்கிறார்கள். வழங்குவது பாரி ஒருவன் மட்டுமல்ல உலகைக் காப்பதற்கு மாரியும் உள்ளது என இகழ்வது போல் புகழ்ந்து, மழைக்கு இணையாகப் பாரியை உயர்த்திக் கூறியிருக்கிறார் கபிலர். இதனை,

**பாரி பாரி யென்றுபல வேத்தி**
**ஒருவற் புலவர் செந்நாப் புலவர்**
**பாரியொருவனு மல்லன்**
**மாரியும் உண்டீங்கு உலகு புரப்பதுவே (புறம் 107)**

என்ற புறநானூற்றுப் பாடல் இயம்புகிறது. மேலும், மாரியின் பண்பு எந்த உயிர்களையும் பிரித்துப் பார்க்காது அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதி, எல்லா இடங்களிலும் பொழிந்து உலக உயிர்களுக்கு நன்மை செய்வது. அதுபோல பாரியும் நல்லவர், தீயவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமல் வாரி வழங்குபவன் என்பது மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் மூலம் தெளிவாகின்றது.

**ஈதல்குணம்**

பூக்களில் எந்தப் பூவை தெய்வங்களுக்குச் சூட்டினாலும் அதாவது தீயதாயினும், நல்லதாயினும், குவிந்த பூங்கொத்துக்களாயினும், புல்லிய இலைகளையுடைய எருக்கம் பூவாக இருந்தாலும் தெய்வங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வது போல அறிவில்லாதவர்கள், அற்பகுணம் உடையவர்கள் என்று பிரித்துப் பார்க்காமல் பாரியிடம் சென்று உதவி கேட்டவர் யாராயினும் மனம் உவந்து வழங்குவதைக் கடமையாகக் கொண்டவன் பாரி என்பதை,

**நல்லவும் தீயவும் அல்ல குவி இனார்ப்**
**புல் இவை எருக்கம் ஆயினம் உடையவை**
**மடவர் பேணேம் என்னா ஆங்கு**
**மடவர் மெல்லியர் செல்லினும்**
**கடவன் பாரி கை வண்மையே (புறம் 106)**

எப்படிப் பட்டவர்களையும் மன்னிப்பதென்பது தெய்வங்களால் மட்டுமே முடியும். அத்தகையை தெய்வங்களுக்கு ஈடாகப் பாரியை உருவகப்படுத்தி கபிலர் பாடியுள்ள பாடல் பாரியின் ஈதல் குணத்தை உணர்த்துகின்றது.

**இரவலர்க்கு ஈதல்**

நிழல் இல்லாத நெடிய வழியில் ஒரு தனிமரம் இருந்தால் அந்த வழியில் நடப்பவர்க்கு அந்த மரம் எவ்வளவு பயன் உள்ளதாக இருக்குமோ அதுபோன்று முரசுடைய மூவேந்தரைக் காட்டிலும் மிகுதியாக இரவலர்க்கு வழங்கும் வண்மை உடையவனாக பாரி இருப்பதை,

**நிழல் இல் நீள் இடைத் தனி மரம் போல**
**பனை கெழு வேந்தரை இரந்தும்**
**இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே! புறம்(119,5-7)**

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் தெளிவுபடுத்தகின்றன. அதாவது வேள்பாரி பிற வேந்தர்களைக் காட்டிலும் மிகுதியாக இரவலர்க்கு கொடை வழங்கும் தன்மை உடையவர் என்ற கருத்தை நமக்கு விளக்குகின்றன.

**தன்னையே பரிசளிப்பவன்**

இரவலர்க்கு வழங்குவதையே அறமாகக் கொண்டவன் பாரி. அவனிடம் பரிசிலர் வந்து இரந்து நின்று தன்னையையே பரிசாகக் கேட்டாலும் நான் வரமாட்டேன் என்று கூறாமல் அவர்கள் அழைப்பதற்கு முன்பாகப் போய் நிற்கக் கூடியவன். இதனை,

**பறம்பு பாடினர் அதுவே அறம்பண்டு**
**பாரியும் பரிசிலர் இரப்பின்**
**வாரேன் என்னான் அவர் வரையன்னே புறம்(108)**

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம். மேலும்,

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)**

அன்பில்லாதவர்கள் எல்லாப்பொருளும் தனக்குரியது என்பர். அன்புடையர் தன்னையே கேட்டாலும் கொடுப்பர் என்று வள்ளுவர் கூறிய கருத்தையும் பாரியின் வண்மைக்கு ஒப்பு நோக்கலாம்.

**பாரியின் அன்பும் பண்பும்**

வேள்பாரி தான் ஆண்ட பறம்பு மலை மக்களிடத்தில் மிகுதியான அன்பு கொண்டவன். மக்களுடைய நலனில் அக்கறை கொண்டவன். பிறருடன் பழகுவதற்கு இனிமையானவன் என்பதை,

**நீரினும் இனிய சாயல்**
**பாரி வேள்பாள் செலினே (புறம் – 105)**

என்ற பாடலின் வாயிலாக நீரினும் இனிய சாயல் கொண்டவனாகத் தன்னை நாடி வருபவர்களை அனுகக் கூடியவன் பாரி என்று கபிலர் கூறுகிறார். இதே போன்று அகநானூற்றிலும்,

**கூர நோய் ஏய்ப்ப விடுவானோ?தன் மலை**

**நீரினும் சாயல் உடையவன்** (கலி - 42,19-20)

என்ற பாடலில் பாரி நீரைப் போலத் தெளிவான சாயலை உடையவன் என்றும் விரும்பி வருபவர்களுக்கு தேரைப் பரிசாகக் கொடுக்கும் கொடையாளி என்றும் பாடியிருக்கிறார், கபிலர் என்பதை அறிய முடிகின்றது.

**பாரியின் வன்மை**

கபிலர் மூவேந்தர்களையும் நோக்கி அவர்கள் பறம்பு நாட்டில் உள்ள அனைத்து மரங்களிலும் தங்களுடைய யானையைக் கட்டினாலும், ஊர் முழுக்க தங்களுடைய படைகளை நிறுத்தி வைத்திருந்தாலும், பகைவர்கள் தங்கள் வாளின் வலிமையால் பாரியை வெல்ல முடியாது என்றும், பாரியின் பறம்பு மலையைப் பகைவர்கள் கொள்வது எளிதல்ல என்றும், முரசு உடைய மூவேந்தர்களும் சூழ்ந்தாலும் பாரியை வெற்றி கொள்ள இயலாது என்றும் கபிலர் கூறியிருக்கிறார். இக்கருத்தை,

**கடந்து அடுதானை மூவிரும் கூடி**

**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொள்ளற்கு அரிதே** (புறம் -110, 1-2)

என்ற புறநானூற்றுப் பாடல் விளக்குகின்றது. பாரியின் பறம்பு மலையைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கும் மூவேந்தர்க்கு அறிவுறுத்தும் தன்மையில் இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இதே கருத்தை,

**ஆளிரூஉக் கடந்து வாளமர் உழக்கு**

**ஏறிதுகோட்டு யானைவேந்தர் ஓட்டிய**

**கடும்பரிப் புரவி வைவண் பாரி** (அகம் 78)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**பாரியின் மென்மை**

மூவேந்தர்களால் வெல்ல முடியாத பறம்பு மலையை நீலநிற இமையுண்ட கண்ணை உடைய விறலி ஒருத்தி கிணையுடன் பாடி வந்தால் எளிதாக அக்குன்றத்தை வென்றுவிடலாம் என்ற இக்கருத்தை,

**அளிதோதா தானே போர் இருங் குன்றே**

**வேரின் வேறல் வேந்தர்க்கோ அரிதே**

**நீலத்து இணைமலர் புரையம் உண்கண்**

**கிணை மகட்கு எளிதால் பாடினள் வரினே** (புறம் 11, 1-4)

பாரியைப் போர்புரிந்து வெல்லமுடியாது, இரந்து சென்றால் எளிமையாக வெல்லலாம் என்ற செய்தியைப் பறைசாற்றுகின்றது இப்பாடல்.

**பாரியின் செங்கோலாட்சி**

ஒரு நாடு மழை பெய்யாமல் தாழ்ந்து போவதற்கான நிலை வந்தாலும் பாரியின் ஆட்சி செங்கோலாட்சி என்பதால் எந்த நேரத்திலும் மழை பொய்க்காது நாடு செழிக்கும் என்பதை,

**மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்**
**தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்**
**வயலும் நிறைய புதல் பூ மலர**
**மனைத்தலை மகவை ஈன்ற அமர்க் கண**
**ஆமா நெடுநிரை நன் புல் ஆர (புறம் 11, 1-5)**

என்னும் புறநானூற்றுப்பாடலில், தீய நிமித்தங்களாக மைம்மீன் புகைதலும், தூமம் தோன்றுதலும், வெள்ளிக்கோல் தென்திசையில் தோன்றினாலும் பறம்பில் பெய்யும் மழை பொய்க்காது. காரணம் பறம்பில் பாரியின் ஆட்சி செங்கோலாட்சியாக இருந்தது. பறம்பு நாடு சான்றோர்கள் நிறைந்து வாழும் நாடாக இருந்தது. எனவே எத்தகைய தீய நமித்தங்கள் ஏற்பட்டாலும் பறம்பில் மழை பொய்க்காமல் பெய்தது. இதனால் நாடு செழிப்பாகவே இருந்தது.

இக்கருத்தோடு,

**முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல் (குறள் 559)**

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்**
**காவலன் காவான் எனின் (குறள் 560)**

நாட்டை ஆளும் அரசன் சரியாக இருந்தால் மழை பொய்க்காது என்ற இந்தக் குறள் கருத்துகளும் ஒப்பு நோக்கத்தக்கன.

**முடிவுரை**

யதார்த்தங்களை உள்ளது உள்ளபடி உருவகப் படுத்தக்கூடியவை இலக்கியங்கள். மனித வாழ்வியலின் பெரும்பகுதி இலக்கியங்களில் இருந்தே அறியப்படுகின்றது. காலம் கடந்த நிலையிலும் சங்ககால மக்களின் போர், அறம், ஆட்சி இவற்றைப்பற்றியெல்லாம் விருப்பத்துடனும் தொய்வு இல்லாமலும் படித்தறிய உதவுவது எட்டுத்தொகையின் புறநூலான புறநானூறு. கடையெழு வள்ளல்களில் தனித்துவமிக்க வள்ளலான பாரியின் ஈதல் குணம், வன்மை, மென்மை, அன்பு போன்றவற்றை புறநானூற்றின் வாயிலாகப் பார்த்ததில், பாரி உலக உயிர்களுக்கு மழை போன்றவனாகவும், ஈதலில் தெய்வமாகவும், பண்பில் நீரைப்போலவும் விளங்கியிருக்கிறான் என்பதைப் புறநானூறு தெளிவுர விளக்கியுள்ளதை நம்மால் உணரமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1.] ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. *புறநானூறு*. கௌரா பதிப்பகம், 2008.

[2.] நாராயணசாமி, வி. *பாரியும் கபிலரும்*. வானதி பதிப்பகம்.

[3.] ந.மு. வேங்கடசாமி நாட்டார். *அகநானூறு மூலமும் உரையும்*. கௌரா பதிப்பகம், 2019.

[4.] பிரபாகரன், வே. *தமிழக வள்ளல்கள்*. திருவள்ளுவர் ஆய்வு நூலகம், 2009.

[5.] வரதராசன், மு. *திருக்குறள்*. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.